வழக்குகளில் தீர்ப்பாகி இருக்கின்றன. உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற இந்தக் குறிப்பிட்ட வழக்கைப்பற்றி என்ன நிலைமை என்பதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. இரா. இராமலிங்கம் : தலைவரவர்களே, இத்தகைய கூட்டுறவு வங்கிகளில் செக்கில் கையெழுத்திடுகின்ற அதிகாரம் தலைவருக்கு இருக்கிறதா அல்லது நிர்வாக அதிகாரிகளுக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, இன்றைக்கு செக்கிலே கையெழுத்துப் போட்டு பணம் எடுக்கும் அதிகாரங்கள் துணை விதிகளின்படி, பைலாவின்படி தலைவரிடம் இருக்கிறது. தலைவர்கள்தான் சொத்துக்களுக்கு, பணத்திற்குப் பொறுப்பு என்று இருக்கிறது. ஆனால் சில தலைவர்கள் தாங்களாகவே முன்வந்து இந்த அதிகாரத்தை, செக்கிலே கையெழுத்திடும் அதிகாரத்தைத் தாங்கள் வைத்துக்கொண்டிருப்பதால் பல குற்றச்சாட்டுகளும் அனாவசியமாக வருகின்றது என்று கருதி செக்கிலே கையெழுத்துப் போடும் அந்த அதிகாரத்தை செயலாளரிடம் கொடுத்துக் கிருக்கிறார்கள்.

உணவுப் பொருள் வழங்குதுறை பணியாளர்கள்

*** 76. வினா—திரு. க. சுப்பு :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உணவுப் பொருள் வழங்கு துறையில் 1964-ம் ஆண்டு முதல் தற்காலிகமாகப் பணிக்கு நியமிக்கப்பட்டவர்களின் பணி இதுவரை முறைப் படுத்தப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) & (இ) உணவுப் பொருள் வழங்கு ஆணையில் உள்ள பதவிகளுக்குப் பணிவிதிகள் எதுவுமில்லை. பணி நிலைமைகள் உணவுத்துறையின் 16—4—1947 நாளிட்ட 449-ம் எண் அரசு ஆணையில் பிறப்பிக்கப்பட்ட நிர்வாகக் கட்டளைகளினால் முறைப்படுத்தப்படுகின்றன. இத்துறையில் தற்காலிகமாக நியமிக்கப்படுபவர்களின் பணியை முறைப்படுத்துவதென்னும் பிரச்சினைக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்தக் கேள்வி, இதுவரையிலும் அந்த சிவில் சப்ளைஸ் இலாக்காவிலே பணியாற்றும் பல சிப்பந்திகள் 8, 9 வருஷங்களாகியும் ரெகுலரைஸ் செய்யப்படாமல் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது, அது உண்மையா ? அப்படியிருந்தால் அவர்கள் எத்தனைபேர் ?

1973 பிப்ரவரி 8]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, கிட்டத் தட்ட 60 சதவிகிதம் பேர் அடுத்த துறையிலிருந்து டெபுடேஷனில் வந்தவா களாக இருக்கிறார்கள். 40 சதவிகிதத்தினரை நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது. அவர்களுக்கு எல்லாச் சலுகைகளும் கொடுக்கப்பட்டிரு கின்றன என்றாலும் அவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் இந்தத் துறையே நிரந்தரமாக இல்லாமல் இருந்ததால் இதுவரையிலே நிரந்தர மாக்க ஏற்பாடு செய்யப்படவில்லை என்றாலும் ஒரு ஆண்டு முடிந்த பிறகு மற்ற அலுவலர்களுக்கு என்னென்ன சலுகைகள் உண்டோ அது அவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. ஆகவே, இந்தச் சர்க்கார் இந்தத் துறையை நிரந்தரமாகப் பண்ணினாலும், பண்ணவிட்டாலும் இந்த ஊழியர்கள் பல ஆண்டுகள் வேலை செய்ததால் அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்ற ஒரு குறிப்பு தயார் செய்து மேலே அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவிலே அவர் களுக்குச் சாதகமாகும் என்று கருதுகிறோம்.

Soap Factories

* 77 *Q.*—Thiru P. SOUNDARAPANDIAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to establish a Soap Factory in every development block ; and

(*b*) if so, the present stage of the proposal?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிலும் சோப்பு தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை ஏற் படுத்துவதற்கான செயற்குறிப்பு எதும் இல்லை. தற்போது இம்மாநிலத்தில் கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்தின் கீழ் 29 சோப்பு தயாரிப்புத் தொழிற் சாலைகள் செயல்பட்டு வருகின்றன. இவைகள் மட்டுமின்றி, மேலும் நான்கு சோப்புத் தயாரிப்புத் தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. மேலும் 50 சோப்பு தயாரிப்புத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. இந்தக் கூடுதல் தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் நிதி உதவியைப் பெறுவதற்காக இது குறித்த திட்ட அறிக்கை இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர்களின் இசைவு இன்னும் எதிர் பார்க்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், கதர்-கிராமக் கைத்தொழிலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சோப் பேக்டரிகள் எல்லாமே வாஷிங் சோப்பிற்காக மட்டும்தானா அல்லது பேத்திங் சோப்பிற்கும் திட்டம் இருக்கிறதா? இன்னும்